Gazette.lk

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சு

இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனம் (SLIATE)

வெற்றிடங்கள்

இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தின் (SLIATE) தலைமை அலுவலகத்தில் பின்வரும் நிரந்த பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை "பணிப்பாளர் நாயகம், இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தின் (SLIATE), இல. 53A, வைத்ய வீதி, தெஹிவளை" என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் 2026.11.21 அன்று அல்லது அதற்கு முன்னர் மேலுள்ள முகவரிக்கு கிடைத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரர் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுதல் வேண்டும்.

இல.	பதவி	இடம்/ இடங்கள் மற்றும் வெற்றிடங்கள்	வெற்றிடங்களின் மொத்தம்
1	பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம் மற்றும் நிதி)	தலைமை அலுவலகம் - தெஹிவளை	01

01. பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம் மற்றும் நிதி) – (வெற்றிடங்கள் 01)

வெளிவாரி தகைமை	I) a) பல்லைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) மூலம் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து முகாமைத்துவம்/ நிர்வாகத்தில் அடிப்படை பட்டம் ஒன்று மற்றும் b) முகாமைத்துவம்/ நிர்வாகம்/ நிதியியல் முதுமாணி பட்டம். மற்றும் c) முதல் பட்டம் பெற்ற பின் முகாமைத்துவ தரத்தில் குறைந்தது 15 ஆண்டுகள் அனுபவம் அதில் பட்டப்பின்படிப்பு தகைமையை பெற்ற பின்னர் சிரேஷ்ட முகாமைத்துவ தரத்தில் 05 ஆண்டுகள் இருத்தல் வேண்டும் அத்துடன் கூட்டுத்தாபனம்/ சபை அல்லது கல்வி நிறுவனம் ஒன்றில் நிரூபிக்கப்பட்ட தளப்பதிவு ஒன்று. II) சேவையின் 15 ஆண்டுகள் அனுபவத்துடன் அகில இலங்கை சேவை ஒன்றின் வகுப்பு ஒன்று அதிகாரி ஒருவர், கல்வித் துறையுடன் தொடர்புபட்டவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் (இரண்டாம் நிலை பணி நியமனம்)
உள்ளக தகைமை	a) இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தில் சிரேஷ்ட முகாமையாளர் பிரிவு (HM 1-3) பதவி ஒன்றில் குறைந்தது 05 ஆண்டுகள் திருப்திகரமான சேவையுடன் பட்டப்பின்படிப்பு பட்டம் ஒன்று மற்றும் b) பல்துறை நிபுணத்துவம் கொண்ட குழுக்களுக்குத் தலைமைத்துவம் வழங்கி, அவற்றைச் சிறப்பாக வழிநடத்தும் திறனை நிரூபித்திருத்தல். மனித வளங்கள் மற்றும் ஏனைய வளங்களை முறையாகப் பயன்படுத்தி, வினைத்திறனுடன் முகாமைத்துவம் செய்வதில் அனுபவம் பெற்றிருத்தல்.

சம்பள அளவு :- **HM 2 – 1 -2025** ரூபா **161,140 - 12 x 4850 – 219,340**

குறிப்பு : 01/2025 ஆம் இலக்க D.M.S. சுற்றுநிருபத்தின்படி, 140,317/= ரூபாவின் சம்பளப் படியில் வைக்கப்படும் மற்றும் 2027.01.01. இல் இருந்து ரூபா 161,140/= ஆகும்.

சேவை நிபந்தனைகள்

(1) தேர்வு செய்யப்படும் அபேட்சகர்கள் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு தமது வருவாயில் 10% பங்களிப்பாளர் ஆவார் என்பதோடு அவர்களின் வருவாயில் 15% SLIATE அதன் நிதியத்தில் இருந்து பங்களிப்புச் செய்யும் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு (ETF) அவர்களின் வருவாயில் 3% பங்களிப்பையும் செய்யும்.

(2) அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் சட்டரீதியான சபைகள் / அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் (SOEs) ஆகியவற்றில் பணியாற்றும் விண்ணப்பதாரர்கள், 1995 இன் 29 ஆம் இலக்க SLIATE சட்டத்தின் 15 (1), (2), (3), (4), (5) ஆகிய பிரிவுகளுக்கு அமைவாக, தத்தமது நிறுவனங்களின் தலைவர்கள் ஊடாகத் தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டும்.

(3) கல்வித் துறையுடன் தொடர்புடைய துறைகளில் முன்னுரிமை அளிக்கப்படும் வகையில், 15 ஆண்டுகள் அனுபவத்தைக் கொண்ட அகில இலங்கைச் சேவையின் முதலாம் வகுப்பு உத்தியோகத்தர்கள் இரண்டாம் பணிநியமன அடிப்படையில் விண்ணப்பிக்க முடியும்.

(4) அனைத்துப் பிரிவுகளுக்குமான விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதியன்று, விண்ணப்பதாரர்களின் வயது 45 இற்கு குறைவாக இருத்தல் வேண்டும். எவ்வாறாயினும், இவ்வயது வரம்பு அரச சேவை, கூட்டுத்தாபனச் சேவை, சட்டரீதியான சபைகள் மற்றும் அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் (SOEs) ஆகியவற்றில் பணியாற்றும் விண்ணப்பதாரர்களுக்குப் பொருந்தாது.

(5) இப்பதவிக்குத் தெரிவு செய்யப்படும், தற்போது அரச உத்தியோகத்தர்களாகப் பணியாற்றும் விண்ணப்பதாரர்கள், உரிய அதிகாரியிடமிருந்து தமது விடுவிப்பினைப் பெற்றுக்கொள்ள வேண்டும். எவ்வாறாயினும், SLIATE நிறுவனத்தில் பணியாற்றும் காலப்பகுதியில் அவர்கள் ஓய்வூதிய உரிமைக்குத் தகுதியுடையவர்களாக இருக்கமாட்டார்கள்.

(6) இந்தப் பிரிவுகளுக்கான அனைத்து ஆட்சேர்ப்புகளும், DMS மூலம் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, கண்டிப்பாக மேற்கொள்ளப்படும். ஆட்சேர்ப்புத் திட்டத்தில் (SOR) குறிப்பிடப்பட்டுள்ள மிகக்குறைந்த தகைமைகளைப் பூர்த்தி செய்வதுடன், குறித்த பதவிக்காக DMS ஆல் அங்கீகரிக்கப்பட்டுள்ள தரப்படுத்தல் / புள்ளியிடல் திட்டத்திற்கும் அமைவான தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்கள் மட்டுமே குறும்பட்டியலில் சேர்க்கப்பட்டு, நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர்.

(7) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள், தாபன விதிக்கோவை, நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் தாபன விதிக்கோவையின் பகுதி II இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுக்காற்று நடைமுறைகள் ஆகியவற்றில் விதிக்கப்பட்டுள்ள உரிய ஏற்பாடுகள் / ஒழுங்குவிதிகளை கண்டிப்பாகப் பின்பற்றுதல் வேண்டும்.

(8) விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரசைகளாக இருத்தல் வேண்டும்.

(9) அனைத்து விண்ணப்பதாரர்களும் சிறந்த நன்னடத்தையைக் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்.

(10) விண்ணப்பதாரர்களால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செல்வாக்குச் செலுத்தும் முயற்சியும் அல்லது முறையற்ற அழுத்தம் பிரயோகிக்கும் செயலும் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதற்கான காரணமாகக் கருதப்படும்.

மேலுள்ள நேர்முகப்பரீட்சை தொடர்பான அனைத்து முடிவுகளும் SLIATE பணிப்பாளர் நாயகத்தினால் எடுக்கப்படும் என்பதோடு அந்த முடிவுகள் இறுதியானது மற்றும் முடிவானதாக கருதப்படும்.

இறுதித் திகதிக்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் மற்றும்/ அல்லது முழுமை பெறாத விண்ணப்பங்கள் அறிவித்தல் இன்றி நிராகரிக்கப்படும்.

www.sliate.ac.lk என்ற முகவரியில் இருந்து விண்ணப்பப் படிவம் மற்றும் மேலதிக விபரங்களை பெற முடியும்.

பணிப்பாளர் நாயகம்
இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனம்
இல. 53 A,
வைத்திய வீதி,
தெஹிவளை.